விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 019 வள்ளுவர் ஆண்டு 2053 மார்கழி 23 சனிக்கிழமை (07.01.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

### அதிகாரப் பகிர்வு தொடர்பில்

# ஏனைய கட்சிகளின் கருத்துக்கள் அவசியம்

### பத்திரிகை ஆசிரியர்களிடம் ஜனாதிபதி



(கொழும்பு)

நாட்டில் அதிகாரப் பகிர்வு தொடர்பில் ஏனைய அரசியல் கட்சிகளின் கருத்துக்களை பெற்றுக்கொள்வது அவசியம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். *(11ஆம் பக்கம் பார்க்க)*

### மோட்டார் சைக்கிளிலிருந்து

# மயங்கிவிழுந்த பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் இருந்து மயங்கி வீழ்ந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய 11

### வடமராட்சி கிழக்கில்

# குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டு பகுதியில் குடும் 11

### பாடசாலை மாணவர்களின்

# புத்தகப் பைகள் சோதனையிடப்படாது

### பிரதிப் பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களின் புத்தகப் பைகளை சோதனையிடுவதற்காக பொலிஸ் அதிகாரிகளை ஈடுபடுத்த வேண்டாம் என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக மேல் மாகாணத்துக்கு 11

### நீதிமன்றங்களைத் தவிர

# வேறு எவரும் தேர்தலை தடுக்க முடியாது

### தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நீதிமன்ற நடவடிக்கைகளைத் தவிர வேறு எந்தமுறையிலும் உள்ளூராட்சி தேர்தலை தடுக்க முடியாது என தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களுடன் அவசர கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

ஜனாதிபதி செயலகத்தில் இந்த கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

ஜனாதிபதி 11

## 55 போதை வியாபாரிகள்

### பாடசாலை சுற்றாடலில் கைது

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் 149 பாடசாலைகளை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டிருந்த 55 பேர் திடீர் சுற்றிவளைப்பில் சிக்கியுள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணி முதல் 3 மணி வரை 11

# வடக்கு, கிழக்கு மாகாணங்களின் காணி விடுவிப்பு தொடர்பாக

### பொங்கல் அன்று ஜனாதிபதி விசேட அறிவிப்பு

(கொழும்பு)

வடகிழக்கு மாகாணங்களில் காணி விடுவிப்பு தொடர்பாக எதிர்வரும் 15ம் திகதி தைப்பொங்கல் தினத்தில் விசேட அறிக்கை ஒன்று வெளியிடப்படும் என ஜனாதிபதி கூறியதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். 11

## யாழ்.மாநகர சபைக்கு மீண்டும் முதல்வர் தெரிவு

### வெளியானது வர்த்தமானி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு மீண்டும் முதல்வர் தெரிவு இடம்பெறவுள்ளது.

இதற்கான வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியாகியது.

யாழ்.மாநகர சபையின் 2023ஆம் ஆண்டிற்கான வரவு செலவு 11

### யாழில் ஜெலி மீன்

# தாக்குதலுக்கு இலக்கான மீனவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

ஜெலிமீன் தாக்குதலுக்கு உள்ளான மீனவர் ஒருவர் நான்கு மாதங்களின் பின் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் குருநகர், 11

### ஐரோப்பாவுக்குள் நுழைய முயன்ற

# முல்லை இளைஞன் போலந்தில் உயிரிழப்பு

(வார்சோ)

சட்டவிரோதமாக ஐரோப்பாவிற்குள் நுழைய முயன்ற முல்லைத்தீவு இளைஞன் ஒருவர், பெலாரஸ் - போலந்து எல்லையில் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளைஞனின் சட்டவிரோத பயண முகவர் இந்த தகவலை குடும்பத் 11

### தாவடியில்

## மாணவன் மீது தாக்குதல்


(யாழ்ப்பாணம்)

வன்முறைக் கும்பலின் தாக்குதலுக்கு இலக்காகி தலையில் படுகாயமடைந்த நிலையில் மாணவன் ஒருவன் யாழ்ப்பாணம் போதனா வைத் 11

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி அழைப்பிதழும் நன்றி நவிலலும்



தோற்றம் 02 • 05 • 1940

மறைவு 09 • 12 • 2022

## அமரர் ஐயாத்துரை தேவராஜா

அரியாலை இல.5, புறூடி முன் ஒழுங்கை கண்டி வீதியை வசிப்பிடமாக கொண்ட எமது குடும்பத்தலைவர் ஐயாத்துரை தேவராஜா கடந்த 9.12.2022 அன்று சிவபதமடைந்தார். அவர் எமை நீங்கி சென்ற 31ஆம் நாள் நிறைவும் அந்தியேட்டிக்கிரியையும் 08.01.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் எமது வீட்டில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து காலை 11.00 மணியளவில் நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதிய போசனமும் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மதியபோசனத்தில் கலந்துகொண்டு அவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன் எம் குடும்பத்தலைவர் சிவபதமடைந்தவேளை வருகை தந்து துயர் துடைத்து ஆறுதல் கூறி தேற்றிய அன்புள்ளங்களுக்கும் உறவினர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் தெரிவித்தவர்களுக்கும் மலர் வளையங்கள் அனுப்பியவர்களுக்கும் பல்வேறு உதவிகளை உணர்வு பூர்வமாக ஆற்றியவர்களுக்கும் இறுதி ஊர்வலத்திலும் தகனக்கிரியையிலும் கலந்துகொண்ட அன்பர்களுக்கும் நண்பர்களுக்கும் உங்கள் மாசற்ற அன்பையும் உதவிகளையும் நீள நினைந்து நவில்கின்றோம்.

– நன்றிகள் பல –

இல.5, புறூடி முன் ஒழுங்கை,
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

(14172)

தகவல் :
குடும்பத்தினர்

# உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் வாக்களிக்க 2 இலட்சம் பேர் முதன் முறையாக தகுதி

(கொழும்பு)

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்கு 1 கோடியே 68 இலட்சம் பேர் தகுதி பெற்றுள்ளார்கள்.

இம்முறை 2 இலட்சம் பேர் முதன் முறையாக வாக்களிக்க தகுதி பெற்றுள்ளார்கள்.

எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதிக்குள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு உத்தேசித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு வேட்புமனுத்தாக்கலை எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை ஏற்றுக்கொள்வதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தபால் மூலமாக வாக்களிப்பதற்கான விண்ணப்பங்கள் கடந்த வியாழக்கிழமை முதல் கோரப்பட்டுள்ளன. எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவுடன் தபால் மூல விண்ணப்பம் கோரல் நிறைவுபெறும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தல் நேற்று முன் தினம் முதல் ஆரம்பமாகின. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முதலாவதாக களுத்துறை தேர்தல் தொகுதிக்கான கட்டுப் பணத்தை செலுத்தியது. அத்துடன் இரு சுயேட்சை குழுக்கள் கண்டி மாவட்ட தேர்தல் தொகுதிக்கான கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளது. (ம-7)


# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில் 24 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- A32 பிரதான வீதியில் இருந்து 600m தூரம்.
- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும் சாவகச்சேரி நகரத்திற்கும் அரச தனியார் பஸ் போக்குவரத்துச் சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்)
- நல்ல தண்ணீர் ஊற்றுச்சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)

ஒரு பரப்பின் விலை **675,000** ரூபாய் மட்டும்

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு - ஜெயம்

(14174)

**077 814 7389, 077 241 7589**


# கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தில் பொதுமுகாமையாளராக கடமையாற்றும் திரு.ராஜமோகன் அவர்களின் அன்புத்தாயார்

## ஸ்ரீமதி மகேஸ்வரி அம்மா சச்சிதானந்த குருக்கள்



அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அம்மா என்ற உறவு அற்புதமானது அன்புடன் தான் வளர்த்து
அறிவையும் பண்பையும் நிறைத்து வளமான வாழ்க்கையை
வளமார உளமார வாழ்ந்திட வாழ வைத்த அன்புத் தெய்வமே
அம்மா பூ உலகிலிருந்து விடை பெற்று விண்ணுலகம்
விரைந்தீர்களோ...!

பிறப்பு 08.12.1933

இறப்பு 06.01.2023

யாழ். மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் - பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(14177)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோய் மருந்துகளுக்கு தட்டுப்பாடு

# பத்தாயிரம் நோயாளர்கள் ஆபத்தில்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

**15 முக்கிய புற்றுநோய் மருந்துகளிற்கான தட்டுப்பாடு காரணமாக 10,000 புற்றுநோயாளர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

புற்றுநோயாளிகளிற்கு 15 பிரதான மருத்துவமனைகள் சிகிச்சை அளிக்கின்றன. 90 வீதமான மருந்துகளிற்குத் தட்டுப்பாடு காணப்படுகின்றது என அரசமருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜயந்த பண்டார தெரிவித்துள்ளார்.

நாங்கள் சுகாதார அமைச்சிற்கு இது குறித்து அறிவித்துள்ளோம். இதனுடன் தொடர்புபட்ட வேறு தரப்பினரும் இது குறித்து அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளனர். எனினும் ஆபத்தில் சிக்குண்டுள்ள மக்களை காப்பாற்ற சுகாதார அமைச்சு எதனையும் செய்யவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆரம்பக் கட்டத்திலேயே கண்டுபிடித்தால் புற்றுநோயை குணப்படுத்தலாம். கிகிச்சை தாமதமானால் அது பரவும். மருத்துவர்களால் எதனையும் செய்ய முடியாது எனவும் குறிப்பிட்டுள்ள அவர் தனியாரிடமிருந்து மருந்துகளைப் பெறுமாறு எங்களால் எங்கள் நோயாளிகளை கேட்க முடியும், ஆனால் எங்கள் நோயாளிகளில் 90 வீதமானவர்களால் அது முடியாது. மருந்துகளின் விலை 50,000 ரூபாய்க்கும் அதிகம் எனவும் அவர் குறிபிட்டுள்ளார். (நி)

# இலங்கை அகதிகள் 38 பேர் கர்நாடகாவில் உண்ணாவிரதம்




(டில்லி)

கனடா செல்வதற்காக முகவர்களால் இந்தியாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டு அவர்களாலேயே காட்டிக்கொடுக்கப்பட்டு கைது செய்யப்பட்ட இலங்கை அகதிகள் 38 பேர் நேற்று முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

2021 ஆம் ஆண்டு கர்நாடகாவின் மங்களூரில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த அவர்களை விடுதலை செய்த நீதிமன்றம் அவர்களை நாட்டிற்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு உத்தரவிட்டிருந்தது.

அதற்கான ஏற்பாட்டினைச் செய்வதற்காக 15 நாட்கள் அவகாசம் நீதிமன்றினால் வழங்கப்பட்ட போதிலும் தம்மை அனுப்பி வைப்பதற்கான ஏற்பாட்டினை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொள்ளவில்லை என்று தெரிவித்தே அகதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

யாரிடம் தொடர்பு கொள்வது என்பது தெரியாது என்று பரிதவிப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். (நி)

# இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கை விஜயம்

(கொழும்பு)

இரு தரப்பு பேச்சுவார்த்தைகளிற்காக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெயசங்கர் இந்த மாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும் இது தொடர்பான இறுதி ஏற்பாடுகள் இன்னமும் பூர்த்தியாகவில்லை.

ஜூலையில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் முதல் தடவையாக ஜெய்சங்கர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

புதுவருடத்தில் இந்தியாவின் உயர்மட்ட பிரதிநிதியொருவர் இலங்கைக்கு மேற்கொள்ளும் முதலாவது விஜயமாக இது அமையவுள்ளது. (நி)

# எரிவாயு விலையை குறைக்கின்றது லாஃப்ஸ் காஸ் நிறுவனம்

(கொழும்ப)

லாஃப்ஸ்காஸ் நிறுவனம் எரிவாயு விலையை குறைக்க தீர்மானித்துள்ளது. இதற்கமைய, கொழும்பு மாவட்டத்தில் 12.5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டரின் புதிய விலை 5080 என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. ஏனைய மாவட்டங்களுக்கு ஏற்பமாறுபடும் விலைகளை அறிய வாடிக்கையாளர் சேவை எண்ணான 1345 ஐ அழைக்குமாறு அந்த நிறுவனம் அறிவித்துள்ளது. (நி)




# வருடாந்த திருவாசக விழா 2023



இடம்:- சந்நிதியான் ஆச்சிரமம் செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.

காலம்:- 08.01.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி

செல்வச்சந்நிதி ஆலய பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து நாயன்மார்களின் திரு உருவப் படங்களும் திருவாசக ஏடுகளும், ஆலயத்திலிருந்து திருவாசக பாராயணத்துடன் ஊர்வலமாக ஆச்சிரமத்திற்கு எடுத்து வரப்படல்.

ஆசியுரை :- பேரவை போஷகர்கள் சிவஸ்ரீ சோ.தண்டபாணிக தேசிகர் அவர்கள் (வல்வை முத்துமாரி அம்மன் ஆலயம்)
பிரம்மஸ்ரீ.ப.மனோகரக்குருக்கள். (வல்வை சிவத்தீஸ்வரன் ஆலயம்)

அருளுரை:- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் (நல்லை ஆதீன குருமுதல்வர்)

சிறப்பு சொற்பொழிவு:- "கைதான் நெகிழ விடேன்"

சைவப்புலவர்: கா.கமலநாதன் அவர்கள் விரிவுரையாளர், தேசிய கல்வியியற் கல்லூரி - ஸ்ரீபாத

சிறப்பு நிகழ்வு

"ஆடிப்பாடி மகிழ்வோம்" வாணிக்கலைஞன் செ.செந்தில்வேல் ஆசிரியர்

திருவாசக இன்னிசை: நுண்கலைமாணி செல்வி மயூரதி குகனேஸ்வரன்

வயலின்: இசைக் கலாவித்தகர் திரு.ப.சியாம்கிருஸ்ணா

மிருதங்கம்: மிருதங்க ஞானவாரிதி திரு.சி.துரைராசா

முன்னாள் இந்து சமய கலாசார கௌரவ அமைச்சர் அமரர் தியாகராசா மகேஸ்வரன் நினைவாக மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

**அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்.**

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை
செல்வச்சந்நிதி தொண்டைமானாறு.

(14167)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவிற்கு பதிலடி கொடுத்து தொடரை சமப்படுத்தியது இலங்கை



இந்திய அணிக்கு எதிரான இரண்டாவது இருபது - 20 போட்டியில் இலங்கை அணி 16 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

புனேவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

இதற்கமைய, முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 06 விக்கெட்டுக்களை இழந்து 206 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

அணிசார்பில் அதிகபட்சமாக அணித்தலைவர் தசுன் ஷானக்க 56 ஓட்டங்களையும் குசல் மெண்டிஸ் 52 ஓட்டங்களையும் சரித் அசலங்க 37 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து 207 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 20 ஓவர்கள் நிறைவில் 08 விக்கெட்டுக்களை இழந்து 190 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வி யடைந்துள்ளது.

இந்திய அணி சார்பில் அதிகபட்சமாக அக்ஷர் பட்டேல் 65 ஓட்டங்களையும் சூர்யகுமார் யாதவ் 51 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். (4)

# ஆசியக்கிண்ண தொடர் செப்டெம்பரில் நடைபெறும்



ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடத்த திட்டமிட்டுள்ளதாக ஆசிய கிரிக்கெட் சபைத் தலைவர் ஜெய் ஷா அறிவித்துள்ளார்.

இதில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய அணிகள் குழு ஏயில் இடம்பெற்றுள்ளதுடன், ஆசிய கிண்ணத்துக்கான தகுதிகாண் சுற்றில் வெற்றி பெறும் அணி குழு ஏயில் இடம் பெறவுள்ளது.

இலங்கை, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் ஆகிய அணிகள் குழு பீயில் அங்கம் வகிக்கின்றன.

குழு நிலைப் போட்டிகளில் தத்தம் குழுக்களில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறும்.


இரண்டாவது சுற்றில் ஒவ்வொரு அணியும் ஏனைய 3 அணிகளுடன் தலா ஒரு முறை மோதிக் கொள்ளவுள்ளதுடன், புள்ளிகள் பட்டியலில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப் போட்டிக்கு முன்னேறும்.

இப்போட்டித் தொடர் பாகிஸ்தானில் நடத்த திட்டமிடப்பட்டிருப்பினும், பொது வான நாடொன்றில் நடத்த உத்தேசித்துள்ளதாக ஆசிய கிரிக்கெட் சபைத் தலைவர் ஜெய் ஷா குறிப்பிட்டுள்ளார். (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2746

**கவி**

எவ்வளவு சோகமா இருந்தாலும் கரெக்ட் டைமுக்கு பசிச்சிருது...




என்ன மானங்கெட்ட வயிறோ...!

**சிந்து**

பணமும் ஞாயிற்றுக்கிழமையும் ஒன்னுதான் வாறதும் தெரியாது போறதும் தெரியாது....



**அருண்**




**கெவிஸ்னா**

மாட்டை அடக்குறவருக்கு என் மூத்த பெண்ணை கட்டிக்கொடுப்பேன்




யோ மாம்ஸ் கன்னுக்குட்டியை அடக்கிட்டேன் இளைய பொண்ணு எனக்குத்தான்...

**துஷா**

டீச்சர் : சீனப் பெருச்சுவர் ஏன் உலக அதிசயங்களில் ஒன்று?

மாணவன் : சைனா தயாரிப்பிலே அது ஒண்ணுதான் ரொம்ப நாள் உருப்படியா இருக்கு டீச்சர்...



**அஷ்வின்**

சாப்பிடும்போது டி.வி பாக்காதீங்க.. சாப்பாடு டேஸ்டே தெரியாது....



சாப்பாடு டேஸ்டா இருந்தா நான் ஏன் டி.வி பாக்குறன்...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெப்ரவரியில் எரிவாயு விலை மேலும் குறைவடையலாம்

(கொழும்பு)

பெப்ரவரி முதல் வாரத்தில் மீண்டும் விலை திருத்தங்களை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளதாக லிட்ரோ நிறுவனத் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள லிட்ரோ அலுவலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர், உலக சந்தையில் சமையல் எரிவாயுவின் விலை குறைவடைந்துள்ளமை மற்றும் விலை சூத்திரத் திற்கமைய விலை குறைப்புகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

2024 தமிழ், சிங்கள புத்தாண்டு வரை எந்த வகையிலும் சமையல் எரிவாயுவிற்கு தட்டுப்பாடு ஏற்படாது எனவும் அவர் குறுதிய ளித்தார். (ஙி)

# மத நல்லிணக்கத்தை சீர்குலைப்பவர் மீது சட்டம் பாயும் - நீதி அமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)



மத நல்லிணக்கம் மற்றும் இன நல்லிணக்கம் நாட்டில் கட்டியெழுப்பப்பட்டுள்ள நிலையில் அதனை சீர்குலைக்க முயல்வோருக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத் துள்ளார். பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன்,ஶ்ரீதலதாமாளி கையை அவமதிக்கும் வகையில் கருத்துத் தெரிவித்த நபருக்குத் தண்டனைச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள் ளார்.

அனைத்து மதங்களுமே தனது மதங்களை மதித்து செயற்படுவதுடன் அனைத்து மதங்களும் அகிம்சை வழியையே போதிக்கின்றன.

அந்த வகையில் மத நல்லிணக்கத்தை சிதைக்கும் வகையில் சமூக வலைத்தளங்கள் மூலம் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மகாநாயக்க தேரர்கள் உள்ளிட்ட எவரும் அதற்கு இடமளிக்கப் போவதில்லை. அவ்வாறு செயற்படும் நபருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அவ்வாறு பௌத்த மதம் மட்டுமன்றி எந்த மதத்திற்கு எதிராகவும் எந்த மத நம்பிக்கைக்கு எதிராகவும் செயற்படும் நபருக்கு எதிராக தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் சட்டம் நிறைவேற்றப்படும் எனவும் நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத் துள்ளார். (ஙி)


## மணிவிழாவும் ஆசிரியர் கௌரவிப்பு நிகழ்வும்

### திருமதி. மதியழகி இளமுருகன்

சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (சித்திர பாடம்) வலிகாமம் கல்வி வலயம்



**சேவை விபரம்**

யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி
22.03.1990-31.12.1995
வ/கனகராயன்குளம் மகாவித்தியாலயம்
01.01.1996-17.11.1997
வ/வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்
18.11.1997-11.02.2001
வ/விபுலானந்தக் கல்லூரி
12.02.2001-29.06.2003
யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை
30.06.2003-30.11.2005
வலயக்கல்வி அலுவலகம் வலிகாமம்
01.12.2005-31.12.2022


திருமதி. நகுலாம்பிகை கனகலிங்கம்
26.03.1990-19.03.2022


திருமதி. கலாநிதி சீவரத்தினம்
29.11.1969 - 31.12.2022


திருமதி. மகாலட்சுமி கந்தராஜன்
21.03.1990-31.12.2022


செல்வி. யோகேஸ்வரி சின்னத்தம்பி
21.03.1990-31.12.2022


திருமதி. சோமேஸ்வரி அமரசிங்கம்
26.03.1990-31.12.2022


திருமதி. கிருஸ்ணகுமாரி உதயகுமார்
21.03.1990-31.12.2022

இடம்:யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி
காலம்: 07.01.2023 காலை 8.55

Best Wishes (14147)

விழா ஏற்பாடு: வலிகாமம் கல்வி வலய சித்திரபாட ஆசிரியர்கள்.



## பதவி வெற்றிடம்

- கணனி ரைப்பிங் மற்றும் பக்க வடிவமைப்பு அனுபவம் உள்ளவர்களும் பயிலுநர்களும் ( ஆண்கள் இரவுக் கடமை )
- முகாமைத்துவ உதவியாளர்கள் (பகல் கடமை பெண்கள்)
க.பொ.த. உயர் தரம், யாழ். நகரிற்கு அண்மித்து வசிப்பவர்களுக்கு முன்னுரிமை.
- வெப்மெசின் மைண்டர் / பயிலுநர் (ஆண்கள் இரவுக்கடமை)

08.01.2023ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நேரில் வரவும்

076 097 3121

பொது முகாமையாளர் வலம்புரி நாளிதழ்


## இராசிபலன்

07.01.2023
மார்கழி 23, சனிக்கிழமை
பிரதமை முழுவதும்

புனர்பூசம் பின்னிரவு 3.17 மணிவரை
சுபநேரம் 3.32-5.02 மணிவரை
இராகு காலம் -9.32-11.52 மணிவரை

சந்திராஷ்டமம்:- மூலம்

வளவன்

**மேஷம்** உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்** பணப்புழக்கம் அதிகமானாலும் அடுத்தடுத்து செலவுகளால் திணறுவீர்கள், அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்** உறவினர் வழியில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும், உடல்நலன் சீராகும்.

**மகரம்** கடமைகளில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள், உறவினர் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்** உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், அந்நிய தேச தொடர்புகள் அனுகூலம் தரும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்** குடும்பப் பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**கும்பம்** பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், காரிய அனுகூலமுண்டு.

**மிதுனம்** எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம், வெளியிடங்களுக்குச் செல்லும் எண்ணம் மேலோங்கும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கன்னி** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், நிலையான வருமானத்திற்கு வழியமைப்பீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**தனுசு** மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு, சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**மீனம்** உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பேச்சில் கனிவு பிறக்கும், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்கள் சந்திப்புண்டு.

வாழ்வும் தாழ்வும் நாம் செய்கின்ற காரியங்களிலேயே உண்டாகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீர்வு பேச்சுக்கள் ஆரம்பிக்க முன்னர்

# இராணுவமயமாக்கலை குறைத்து

# மக்கள் காணிகளை விடுவியுங்கள்

## மதத் தலைவர்கள், பாதிக்கப்பட்ட தரப்புக்கள், மாணவர்கள் அரசிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பான பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க முன்னர் தமிழர் தாயகத்தில் உள்ள இராணுவத்தை குறைப்பதுடன் தமிழர்களின் பூர்வீகக் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மதத் தலைவர்கள், பாதிக்கப்பட்ட தரப்பினர், மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

அரசுடனான பேச்சுவார்த்தையில் தமது நிலைப்பாடு தொடர்பில் நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.


அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு-கிழக்கு மாகாணங்களைத் தமது தாயகமாகக் கொண்டு வாழும் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தை தமிழ் அரசியல் தரப்பினருக்கும் அரசுக்குமிடையில் நடைபெறுவதற்கான முன்னேற்பாடுகள் நடைபெறுவதை அறிகின்றோம்.

பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ள தமிழ்த்தரப்பினரின் பிரதிநிதிகள், எங்களுடைய நிலைப்பாட்டை வலுவாக முன்வைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம்.


எந்தவொரு உத்தியோகபூர்வமான பேச்சுக்களும் ஆரம்பிக்க முன்னர், வடகிழக்கில் இராணுவ பலத்தை தற்போதைய மட்டத்தின் 25 வீதத்தால் ஆவது குறைத்து, தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகளை உரிய சட்டபூர்வமான உரிமையாளர்களிடம் ஒப்படைப்பதன் மூலம் அரசானது தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பது அர்த்தம் அற்றது என்பதையும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

தமிழ்த்தேசிய இனப்பிரச்சினைக்கான எந்தவொரு நிரந்தர அரசியல் தீர்வுக்கும் சர்வதேசத்தினால் நடத்தப்பட்டு கண்காணிக்கப்படும் பொதுவாக்கெடுப்பின் மூலம் தமிழ் மக்களின் ஆணையைப்பெற வேண்டும். இதில் சர்வதேசத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் தெரிவுகளாக உள்ளடக்கப்பட வேண்டும் என தெரிவித்துள்ளனர். (4-6)



யாழ்ப்பாணம் - நல்லூர் சிவன் கோவில் தேர்த்திருவிழா நேற்றுக் காலை மிகவும் பக்திபூர்வமாக இடம்பெற்றது.
(படம்:-சிவசாந்தன்)

## இரத்ததான முகாம்



(கரணவாய்)

மைக்கல் விளையாட்டு கழகம், மைக்கல் நேசக்கரம் மண்ணின் மைந்தர்கள் நினைவாக நடத்தும் இரத்ததான முகாம் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு அல்வாய் மைக்கல் விளையாட்டுக்கழக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

குருதிக் கொடையாளர்களை கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (நி-6-60)

## வடமராட்சி திக்கத்தில்

# 14 பவுண் நகை திருட்டு; பொலிஸில் முறைப்பாடு

(கரணவாய்)

வடமராட்சி திக்கம் பகுதியில் உள்ள வீடொன்றில் அண்மையில் வீட்டின் உரிமையாளர்கள் வெளியே சென்ற சமயம் வீட்டினுள் நுழைந்த திருடர்களால் 14 பவுண் நகை மற்றும் பணம் திருடப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் வீட்டு உரிமையாளரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. முறைப்பாட்டையடுத்து பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (4-6-60)

## சமுத்திர பல்கலைக்கழகத்தால்

# தொழில் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் முதலாம் கல்வியாண்டில் நீரியல் வளர்ப்பு மற்றும் நீரியல்வள முகாமைத்துவ டிப்ளோமா, கடலுணவு தொழில்நுட்ப டிப்ளோமா, நீரியல் வளர்ப்பு தொழில் நுட்பவியலாளர், வெளி இணைப்பு இயந்திர பொறிவலர், கடலக மாலுமி, சுழியோடி, உயிர் பாதுகாப்பு, தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியலாளர், அலங்கார மீன் வளர்ப்பும் முகாமைத்துவமும், நீச்சல் பயிற்சி, கடலக வரைபடம் வாசித்தலும் செய்மதி தொடர்பாடலும், தொழில்சார் ஆங்கில கற்கை நெறிக்கான தேசிய சான்றிதழ் ஆகிய பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

க.பொ.த.சாதாரண தரம், உயர்தரம் தோற்றியவர்கள் மற்றும் துறைசார் ஆர்வமுடையவர்கள் இக்கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும். மேலும் இக் கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்பவர்கள் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ளும் வகையில் தேசிய தொழிற்றகைமைச் சான்றிதழினை பெற்றுக் கொள்ள முடியும்.

மேற்படி கற்கைநெறிகளை கற்க விரும்புபவர்கள் உரிய விண்ணப்பப்படிவங்களை தபாலிலோ அல்லது நேரிலோ எமது அலுவலகத்தில் பெற்று 25.01.2023 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும். மேலதிக தொடர்புகளுக்கு-076 293 9888 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என இலங்கை சமுத்திர பல்கலைக்கழக யாழ்.பிராந்திய உதவிப் பணிப்பாளர் கோ.அருள்சிவம் அறிவித்துள்ளார். (4)

## வலி.தெற்கு பிரதேச சபையின்

# நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

வலகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் உப அலு வலகத்தினால் இன்று சனிக் கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை "சுன்னா கம் கிழக்கு சனசமூக நிலையத்தில் (சிவன் முன் பள்ளி)" நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது.

இச்சேவையில் ஜே/195, ஜே/197 ஆகிய இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குட்பட்ட மக்கள் சோலைவரி அறவீடு (நிலுவை மற்றும் 2023 ஆம் ஆண்டிற்கான சோலைவரியினைச் செலுத்தி 10% கழிவினைப் பெற்றுக் கொள்ளலாம்,

ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பான நடவடிக்கைகள், வியாபார நிலையங்களுக்கான வியாபார உரிமம்/வரி பெற்றுக்கொள்ளல், சுன்னாகம் பொது நூலகத்தில் அங்கத்தவராக இணைந்து கொள்வதற்கான விண்ணப்பப் படிவம் வழங்கல் போன்ற சேவையினைப் பெற்றுக்கொள்ள முடியும் என வலி.தெற்கு பிரதேச சபை தவிசாளர் அறிவித்துள்ளார். (4)

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் உப அலுவலகத்தினால் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை "முத்தமிழ் மன்றத்தில்" நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது.

இச்சேவையில் ஜே/196, ஆம் இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குட்பட்ட மக்கள் சோலைவரி அறவீடு (நிலுவை மற்றும் 2023 ஆம் ஆண்டிற்கான சோலைவரியினைச் செலுத்தி 10% கழிவினைப் பெற்றுக் கொள்ளலாம், ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பான நடவடிக்கைகள், வியாபார நிலையங்களுக்கான வியாபார உரிமம்/வரி பெற்றுக் கொள்ளல், சுன்னாகம் பொது நூலகத்தில் அங்கத்தவராக இணைந்து கொள்வதற்கான விண்ணப்பப் படிவம் வழங்கல் போன்ற சேவையினைப் பெற்றுக்கொள்ள முடியும் என வலி: தெற்கு பிரதேச சபை தவிசாளர் அறிவித்துள்ளார். -(4)

# சந்நிதியான் ஆச்சிரமத்தின் வருடாந்த திருவாசக விழா

(யாழ்ப்பாணம்)

வருடாந்த திருவாசக விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தொண்டைமாறு செல்வச்சந்நிதி சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது செல்வச்சந்நிதி ஆலய பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து நாயன்மார்களின் திரு உருவப் படங்களும் திருவாசக ஏடுகளும் ஆலயத்தில் இருந்து திருவாசக பாராயணத்துடன் ஊர்வலமாக ஆச்சிரமத்திற்கு எடுத்துவரப்படவுள்ளன. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டுப் பலன்கள்

## 01.01.2023 - 31.12.2023



**எட்டில் வரும் குருவால் எண்ணற்ற மாற்றம் வரும் கன்னி இராசி வாசகர்களே!**

இந்தப் புத்தாண்டு உங்களுக்கு வளர்ச்சியைக் கொடுக்கும் ஆண்டாகவே அமையப்போகிறது. மாபெரும் கிரகங்களாக விளங்கும்சனி, குரு, ராகு, கேது ஆகியவற்றின் பெயர்ச்சி காலங்கள், முன்னோக்கிச் செல்லும் சூழ்நிலையை உருவாக்கும். திடீரென பின்னோக்கிச் செல்லும் வாய்ப்பும் உண்டு. காரணம் சர்ப்பக் கிரகத்தின் ஆதிக்கம், இந்த ஆண்டு உங்கள் இராசியில் வருகிறது. எனவே ஏற்றமும் இறக்கமும் கலந்த சூழ்நிலை உருவாகும். துணிவும் தன்னம்பிக்கையும் குறையாமல் பார்

அரசு வழியில் ஆதாயம் கிடைக்கும். மாற்று இனத்தவர்களின் ஒத்துழைப்போடு கூட்டு முயற்சியில் வெற்றி கிடைக்கும்.

**கும்ப - சனி சஞ்சாரம்**

29.3.2023 அன்று சனிபகவான் அவிட்டம் 3 ஆம் பாதத்தில் கும்ப இராசிக்கு பெயர்ச்சியாகிச் செல்கின்றார். 24.8.2023 அன்று மகரத்திற்கு வக்கிர இயக்கத்தில் வரும் அவர், 20.12.2023 அன்று மீண்டும் கும்ப இராசிக்குச் செல்கிறார். இடையில் கும்ப இராசியிலும் மகர இராசியிலும் வக்கிர இயக்கத்தில் சஞ்சரித்து, எண்ணற்ற மாற்றங்களை ஏற்படுத்தப் போகிறார். இதுவரை பூர்வபுண்ணிய ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த சனிபகவான் எதிப்பு, வியாதி, கடன் ஆகியவற்றைக் குறிக்கும் 6 ஆம் இடத்திற்கு வருகிறார். அதனால் மன அமைதி குறையும். மக்கள் செல்வங்களால் விரயங்கள் ஏற்படும். எதிர்ப்புகள் மேலோங்கி இருந்தாலும் அதை வெல்லும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாவதால், இடமாற்றம் வரக்கூடும். ஆரோக்கியத்தில் அடிக்கடி அச்சுறுத்தல் ஏற்பட்டு அகலும்.

**மேஷ - குரு சஞ்சாரம்**

22.4.2023 அன்று குரு பகவான், அசுவதி நட்சத்திரம் முதல் பாதத்தில்

விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். பிள்ளைகளின் கல்யாண காரியங்களை முன்னிட்டு சீர்வரிசைப் பொருட்கள் வாங்குவதிலும் மும்முரம் காட்டுவீர்கள். உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த புதுமுயற்சிகள் பலன் தரும். நல்ல நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம். வாடகை வீட்டில்




வசிப்பவர்கள் சொந்த வீடு செல்லும் யோகம் உண்டு.

**ராகு-கேது பெயர்ச்சி**

8.10.2023 அன்று ரேவதி நட்சத்திரம் 4 ஆம் பாதம் மீன இராசியில் ராகுவும் சித்திரை நட்சத்திரம் 2 ஆம் பாதம் கன்னி இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். இதன் விளைவாக ஜென்ம இராசியில் கேதுவும் சப்தம ஸ்தானத்தில் ராகுவும் இருப்பதால் "கால சர்ப்பதோஷம்"

த்தில் சகோதர ஒற்றுமை குறையலாம். சேமிப்புகள் கரையும். இழப்புகளை ஈடுசெய்ய எடுத்த முயற்சியில் தாமதம் ஏற்படும். பொருளாதாரப் பற்றாக்குறையின் காரணமாக கடன்சுமை மற்றும் கைமாற்று வாங்கும் சூழ்நிலை அமையும். உடல்நலத் தொல்லைகளும், ரண சிகிச்சைகளும் ஏற்படும். புதிய வாய்ப்புகள் வந்தாலும் உபயோகப்படுத்திக் கொள்ள இயலாது. இடம், பூமியால் பிரச்சினைகள் அதிகரிக்கும். எதிர்காலத்தைப் பற்றிய பயம் மேலோங்கும். தொழில் பங்குதாரர்கள் விலகிக் கொள்வதாகச் சொல்லி அச்சுறுத்துவர். வீடு மாற்றம், நாடு மாற்றம் ஏற்படலாம்.

**வளர்ச்சி தரும் வழிபாடு**

பிரதோஷ காலத்தில் விரதம் இருந்து நந்தியம் பெருமானை வழிபட்டு வாருங்கள். யோகபலம் பெற்ற நாளில், சிவபெருமானையும் அம்பாளையும் வணங்கி வந்தால் வாழ்க்கை வளமாகும்.

**சனி மற்றும் குரு வக்கிர காலம்**

27.6.2023 முதல்23.8.2023 வரை கும்ப இராசியிலும் 24.8.2023 முதல் 23.10.2023 வரை மகர இராசியிலும்

## தெய்வ வழிபாடு திருப்தியான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும்!

**ஜோதிடக் கலாமணி**
**சிவல்புரி சிங்காரம்**

த்துக் கொள்ளுங்கள். இடமாற்றம், வீடு மாற்றம், உத்தியோக மாற்றம் போன்றவை வந்து மன அமைதியைக் குறைக்கலாம். திசா புத்திக்கேற்ற தெய்வ வழிபாடு திருப்தியான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும்.

**புத்தாண்டு கிரக நிலை**

புத்தாண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன், விரயாதிபதி சூரியனோடு இணைந்து சுகஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே ஆரோக்கியம் சீராக, கொஞ்சம் விரயம் செய்ய வேண்டிய சூழல் உருவாகும். வருடத் தொடக்கத்தில் குருவின் பார்வை உங்கள் இராசியில்பதிகிறது. 2 இல்கேதுவும் 8 இல் ராகுவும் சஞ்சரிக்கிறார்கள். சுக்கிரனோடு இணைந்து பஞ்சம ஸ்தானத்தில் சனி சஞ்சரிக்கிறார். ஒன்பதாம் இடத்தில் வக்கிரம் பெற்ற செவ்வாய் வீற்றிருக்கிறார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் புத்தாண்டு தொடங்குகிறது.

புத்தாண்டு தொடங்கும் பொழுது குருவின் பார்வை, உங்கள் இராசியில் பதிவதோடு, 2, 11 ஆகிய இடங்களிலும் பதிகிறது. எனவே உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். கடன் சுமை குறைய புதிய வழிபிறக்கும். கவலைகள் அகல உடன்பிறப்புகள் வழிகாட்டுவர். பெற்றோர்களின் உடல் நலத்தில் கவனம் தேவை. பெரிய தொகை ஒன்று கைக்கு கிடைத்து அதன்மூலம் சுபகாரியங்களை நடத்துவீர்கள். இடம், பூமி விற்பனையால் இலாபம் உண்டு. தனவரவை மேம்படுத்துவதற்கான தகுதியை வளர்த்துக் கொள்வீர்கள்.

மேஷ இராசிக்குப் பெயர்ச்சியாகிறார். அவரது பார்வை 2, 4, 12 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே வாக்கு, தனம், குடும்பம், தாய், வீடு, வாகனம், சுகம், பயணம், வெளிநாடு போன்ற ஆதிபத்யங்களில் எல்லாம் நல்ல மாற்றங்கள் ஏற்படப் போகிறது. பணத்தேவை பூர்த்தியாகும். கொடுக்கல் - வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். வீண் விரயங்களை சுப விரயங்களாக மாற்ற முயற்சி செய்து கொள்ளுங்கள். குருவின் பார்வை 4 ஆம் இடத்தில் பதிவதால் வீடு கட்டும் வாய்ப்பும் அசையாச் சொத்து வாங்கும் வாய்ப்பும் கைகூடி வரும். தாயின் உடல்நிலை சீராகும். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும்.

என்றைக்கோ வாங்கிப் போட்ட சொத்துக்கள், பல மடங்கு விலை உயர்ந்து விற்பனையாகி அதன் மூலம் ஒரு பெரும் தொகை கிடைக்கலாம். அதனைக் கொண்டு கடனை அடைத்துவிட்டு மீதி பணத்தில் புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். 12 ஆம் இடத்தைக் குரு பார்ப்பதால் சுபவிரயங்கள் அதிகரிக்கும். மங்கல ஓசை மனையில் கேட்க எடுத்த முயற்சி கைகூடும். நீண்ட தூரப் பயணங்கள் பலன் தருவதாக அமையும். வீட்டிற்குத் தேவையான

உருவாகிறது. எனவே நினைத்தது நிறைவேறுவதில் சில தடைகளும் தாமதங்களும் ஏற்படலாம். வீண் விரயங்களும் பொருளாதாரப் பற்றாக்குறையும் அதிகரிக்கும். ஆன்மிக நாட்டம் கூடும். ஜென்ம கேதுவால் மனக்குழப்பங்கள் அதிகரிக்கும்.

பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் மாற்றப்படலாம். 7 இல் கேது இருப்பதால் குடும்பச்சுமை கூடும். வந்த வரன்கள் கைநழுவிச் செல்லும். கல்யாணம் ஆனவர்களுக்கு வாழ்க்கைத்துணை வழியே பிரச்சினைகள் அதிகரிக்கும். குடும்பத் தகவல்களை 3 ஆம் நபர்களிடம் சொல்வதால் பிரச்சினைகள் தலைதூக்கும். யாரையும் நம்பி எதையும் செய்ய இயலாது. இக்காலத்தில் ராகு- கேது தோஷ நிவர்த்திக்குரிய பரிகாரங்களை யோகபலம் பெற்ற நாளில் அனுகூல ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டால் போராட்டமான வாழ்க்கை மாறும்.

**கவனமுடன் செயற்பட வேண்டிய காலம்**

புத்தாண்டில் 4 முறை செவ்வாய் - சனி பார்வை ஏற்படுகிறது. இக் கால

சனிபகவான் வக்கிரம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 5, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. பூர்வபுண்ணிய ஸ்தானாதிபதி வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. பொருளாதாரப் பற்றாக்குறை அதிகரிக்கும். திட்டமிட்ட காரியங்கள் திசைமாறிச் செல்லும். திடீரென உத்தியோகத்தில் மாற்றங்கள் ஏற்படலாம். 12.9.2023 முதல் 19.12. 2023 வரை மேஷ இராசியில் குரு வக்கிரம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் வக்கிரம் பெறுவது யோகம் தான். வீடு கட்டும் முயற்சியில் வெற்றி கிடைக்கும். இடம், பூமியால் இலாபம் உண்டு. கல்யாண வாய்ப்பு கைகூடும். கல்விக்காக எடுத்த முயற்சியில் நற்பலன்கள் கிடைக்கும். சுபச் செய்திகள் வீட்டை முற்றுகையிடும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இப்புத்தாண்டின் தொடக்கத்தில் நற்பலன்கள் கிடைக்கும். ஆயினும் ராகு-கேது பெயர்ச்சியின் விளைவாக சர்ப்ப தோஷம் உருவாகிறது. எனவே சர்ப்ப சாந்தி வழிபாடுகளை மேற்கொண்டால் பொருளாதாரமும் திருப்தி தரும். மன நிம்மதியும் கூடும். சுபவிரயங்கள் அதிகரிக்கும். கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலமே ஒற்றுமை உருவாகும். பிள்ளைகளின் உத்தியோகம் கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும். குடும்ப இரகசியங்களை வெளியில் சொல்வதால் சில பிரச்சினைகள் வரலாம். பணிபுரியும் பெண்களுக்கு இடமாற்றமும் ஊதிய உயர்வும் உண்டு.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 70





"அது என்ன மயக்கமடி? எங்களுக்குத்தான் சொல்லேன்!" என்றாள் செந்திரு. வாரிணி செந்திருவின் காதோடு ஏதோ சொன்னாள். "என்னடி இரகசியம் சொன்னாள்? எங்களுக்குத் தெரியக் கூடாதா?" என்று நிரவதி கேட்டாள்.

"அது சாதாரண மயக்கமில்லையாம்! மையல் மயக்கமாம்!" என்றாள் செந்திரு. உடனே எல்லோரும் கலகலவென்று சிரித்தார்கள். அதைக் கேட்டு விட்டு நதிக்கரை மரங்களில் இருந்த பறவைகள் சடசடவென்று இறக்கையை அடித்துக் கொண்டு பறந்து சென்றன. "நம் இளவரசர் இலங்கையிலிருந்து திரும்பி வந்தால் மறுபடியும் இவள் மாயப்பொடி போடப் பார்ப்பாள். அதற்கு நாம் இடங்கொடுத்து விடாமல் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்" என்று சொன்னாள் நிரவதி.

"இளவரசர் திரும்பி வருவதற்குள் இந்த வானதி பைத்தியம் பிடித்துப் பிதற்ற ஆரம்பிக்காவிட்டால் என் பெயர் தாரகை இல்லை; பெயரைத் தாடகை என்று மாற்றி வைத்துக் கொள்ளுகிறேன்!" என்றாள் தாரகை.

"அது கிடக்கட்டுமடி! இளைய பிராட்டி சொல்லிவிட்டுப் போன காரியத்தை அவர் வருவதற்குள் செய்து வைக்க வேண்டாமா? வாங்கடி" என்றாள் மந்தாகினி.

பிறகு அப்பெண்களில் இருவர் படகின் அடியில் ஏற்கனவே சிறிது பெயர்ந்திருந்த ஒரு பலகையைப் பெயர்த்து எடுத்தார்கள். பெயர்க்கப் பட்ட இடத்தில் நீளமான பெட்டி போல் அமைந்த பள்ளத்தில் ஒரு முதலை கிடந்தது! அதாவது செத்துப்போன முதலையின் உடலைப் பதப்படுத்தி உள்ளே பஞ்சும் நாரும் திணித்து வைத்திருந்த பொம்மை முதலை.

அதை எடுத்து வெளியில் வைத்துக் கொண்டார்கள். படகைச் சிறிது தூரம் செலுத்திக் கொண்டு சென்று, நதிக்கரை ஓரத்தில் பெரிய பெரிய வேர்கள் விட்டு வளர்ந்திருந்த ஒரு பெருமரத்தின் அருகில் வந்தார்கள்.

அம்மரத்தின் ஓரத்தில் அத்தோல் முதலையை எடுத்து விட்டார்கள். அது மர வேர்களிலே பாதியும் நதி வெள்ளத்தில் பாதியுமாகக் கிடந்தது. பார்ப்பதற்கு நிஜ முதலையைப் போலவே பயங்கரமான தோற்றம் அளித்தது.

வெள்ளம் அடித்துக் கொண்டு போய் விடாமல் ஒரு சிறிய மணிக் கயிற்றை அதன் கால் ஒன்றில் கட்டி வேரோடு சேர்த்துப் பிணைத்தார்கள். கயிறு வெளியில் தெரியாதபடி நீருக்குள்ளேயே அமுங்கியிருக்கும்படி கட்டினார்கள்.

"ஏனடி, மந்தாகினி! எதற்காக இந்தப் பொம்மை முதலையை இப்படி மரத்தடியில் கட்டி வைக்கச் சொல்லியிருக்கிறார் இளையபிராட்டி?" என்று தாரகை கேட்டாள். "உனக்குத் தெரியாதா? வானதி மிக்க பயந்தாங்கொள்ளியாயிருக்கிறாள் அல்லவா? அவளுடைய பயத்தைப் போக்கித் தைரியசாலி ஆக்குவதற்குத்தான்!" என்றாள் மந்தாகினி.

"எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால், வானதியை இளவரசருக்குக் கல்யாணம் பண்ணி வைத்து விட வேண்டும் என்றே குந்தவை தேவி உத்தேசித்திருக்கிறார் போலிருக்கிறது!" என்றாள் நிரவதி.

"அப்படி ஏதாவது பேச்சு வந்தால் நான் இந்த வானதிக்கு விஷத்தைக் கொடுத்துக் கொன்று விடுகிறேன். பார்த்துக் கொண்டிரு!" என்றாள் பொறாமைக்காரியான வாரிணி.

"நீ இப்படியெல்லாம் எரிச்சல் அடைவதற்குக் காரணமே இல்லை. மானிய கேடத்து இரட்டை மண்டலச் சக்கரவர்த்தியும் வேங்கி நாட்டின் மன்னரும் கலிங்க தேசத்து ராஜாவும் வடக்கே வெகு தூரத்தில் உள்ள கன்னோசி சக்கரவர்த்தியும் கூட நம் இளவரசருக்குப் பெண் கொடுக்கக் காத்திருக்கிறார்களாம்! அப்படியிருக்க இந்தக் கொடும்பாளூர் வானதியை யாரடி இலட்சியம் செய்யப் போகிறார்கள்!" என்றாள் மந்தாகினி.

"நீ சொல்லுகிறபடி அந்த அரசர்கள் காத்திருக்கலாமடி! ஆனால் நம் இளவரசருடைய விருப்பம் அல்லவா முக்கியம்? இளவரசர் 'நான் எப்போதாவது கல்யாணம் செய்து கொண்டால் தமிழகத்துப் பெண்ணைத்தான் மணந்து கொள்வேன்' என்று சொல்லிக் கொண்டிருக்கிறாராம்! உங்களுக்கெல்லாம் இது தெரியாதா?" என்றாள் செந்திரு.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## பரமார்த்த குரு கதைகள்

### காணாமற்போன கறவைப் பசு

(நேற்றைய தொடர்ச்சி)

ஆனால் ஓர் ஊரிலே ஓர் ஏரிக் கரையின் கீழே நன்றாகச் செழித்து வளர்ந்திருந்த புல் புதரிலே நான்கு ஐந்து பெட்டைக் குதிரைகள் அழகாக மேய்ந்து கொண்டிருந்தன.

அவற்றைப் பார்த்ததும் எனக்கு உடனே நம் குருநாதர் நினைவு வந்துவிட்டது. ஆசையோடு அந்தக் குதிரைகளை நெருங்கிச் சென்றேன். அருகே போனதும் தான் பார்த்தேன் ...தரையிலே பெரிய பெரிய முட்டைகள்! என் இரு கைகளாலும் கட்டித் தழுவ முடியாத பெரிய முட்டைகள். இதுவரை நான் அவ்வளவு பெரிய முட்டைகளைப் பார்த்ததே இல்லை.

அந்த முட்டைகள் நன்றாக மேய்ந்து கொழுத்திருந்த அந்தக் குதிரைகள் இட்ட முட்டைகளாகத் தானே இருக்க வேண்டும்! எனக்குச் சந்தேகம் வந்தது! அதைத் தீர்த்துக் கொள்ள அக்கம் பக்கத்தில் யாராவது இருந்தால், கேட்டுத் தெரிந்து கொள்ளலாமே என்று நினைத்தேன். கடவுள் கிருபையாலும் நம் குருநாதர் கடாட்சத்தாலும் அப்போதுதான் அந்த வழியாக வந்த ஓர் ஆளை நிறுத்திக் கேட்டேன். "இதெல்லம் குதிரை முட்டைகள் அல்லவா?" என்றேன்.

என் சந்தேகம் தீர்ந்து விட்டது. அவை குதிரை முட்டைகளே. அவன் அடித்துச் சொல்லி விட்டான். நான் நினைத்தது நூற்றுக்கு நூறு சரி. அவை குதிரை முட்டைகளே!

அந்த முட்டை என்ன விலையாகும் என்று கேட்டேன். அவன் "அதிகமில்லை. ஆறு பொன்" என்றான். எனக்காக வேண்டுமானால் ஐந்து பொன்னுக்குத் தருவதாகச் சம்மதித்தான்.

இது சந்தோசமான சமாச்சாரம் இல்லையா! விலை சகாயமாக வருகிற போது குதிரை முட்டையை முட்டையாகவே வாங்கி அதிலிருந்து குதிரைக்குட்டி வந்தால் அதை இளமையிலேயிருந்து நம் இஷ்டப்படி நல் குதிரையாக வளர்க்கலாமே! வளர்ந்த குதிரையை வாங்கப் போனால் விலையும் அதிகமாக இருக்கும்.

அது முரட்டுக் குதிரையாகவும் இருந்து தொலைக்கும்.

அதனால் குருநாதருக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டுவிட்டால்? சின்ன வயதிலிருந்தே நாமே வளர்த்து குருநாதரோடு பழக்கி வருவது எவ்வளவு நல்லது?

மட்டி தன் புத்திசாலித்தனத்தைத் தானே மெச்சிக் கொண்ட போது, மற்றவர்களும் அவனோடு ஆமோதித்துப் பேசினார்கள்.

முடிவாக மட்டியிடம் ஐந்து பொன்னைக் கொடுத்து அவனுக்குத் துணையாக மடையனையும் குதிரை முட்டை வாங்குவதற்கு வழியனுப்பி வைத்தார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல செயல் எப்போதும் உலகில் தனக்கு ஓர் இடம் உண்டாக்கிக்கொள்ளும்.

- எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# சட்டத்தை அமுல்படுத்துவதாயினும் பண்பாடு பேணப்பட வேண்டும்

பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல் என்கிறது கலித்தொகை.

பண்பாடு என்ற தமிழ்ச் சொற்பதம் மிகுந்த பொருள் விளக்கம் கொண்டது.

தவிர, தமிழ்ப் பண்பாடு என்பது தமிழர் வாழ்வியலில் மிகவும் முக்கியத்துவமுடையது.

தமிழ் மக்களின் தாயகம், அவர்களின் வாழ்வியல், அவர்களின் இருப்பு என்பன பற்றி அறிந்தவர்களால் மட்டுமே தமிழ் மக்களைப் புரிந்து கொள்ள முடியும்.

பொதுவில் வெளிநாட்டில் இருந்து வருகின்ற தூதுவர்கள் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் தமிழ் மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிவதில் - புரிந்து கொள்வதில் இடர்படுகின்ற இடம்தான் தமிழ்ப் பண்பாடாகும்.

ஆம், எப்படியும் வாழலாம் என்ற கலாசாரத்துக்குட்பட்டவர்களால் தமிழ் மக்களின் குடும்பக் கட்டமைப்பு, தனிமனித ஒழுக்கம் அவர்களின் கலை கலாசார விழுமியங்கள், அவர்களின் இனத்துவப் பண்பாடு என்பவற்றைப் புரிந்து கொள்ள முடிவதில்லை.

இந்த இடத்தில் அவரவர் புரிதலுக்கு ஏற்ப உடன்பாடும் முரண்பாடும் ஏற்படவே செய்கிறது.

எது எவ்வாறாயினும் தமிழர் பண்பாட்டைச் சிதைப்பதென்பது சாதாரணமான விடயமன்று.

அந்தவகையில் தமிழர்களின் பண்பாட்டைப் புரிந்து கொண்டு செயலாற்றுவது அனைவரதும் கடமையாகும் என்பதோடு அந்த விடயத்தை நிறைவுபடுத்திக் கொள்ளலாம்.

இனி நாம் பிரஸ்தாபிக்க முற்பட்ட விடயத்தை முன்வைப்பது பொருத்துடையதாக இருக்கும்.

ஆம், நேற்று முன்தினம் (05) யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் மனோகராச் சந்திக்கும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிச் சந்திக்கும் இடையில் கடமையில் ஈடுபட்டிருந்த போக்குவரத்துப் பொலிஸார் மோட்டார் சைக்கிளில் சென்ற இளம் பெண் ஒருவரை இடைமறித்து சாரத்திய அனுமதிப்பத்திரங்களைப் பரிசோதித்தனர்.

(இவ்வாறான சோதனை பல இடங்களில் நடைபெறுகிறது)

இதில் ஏதோவொரு ஆவணக்குறைபாடு இருந்துள்ளதை உணர முடிகிறது.

இதில் முக்கிய விடயமென்னவெனில் போக்குவரத்துப் பொலிஸாரின் சோதனை இடம்பெற்ற நேரம் இரவு 7 மணி.

அதாவது இரவு 7 மணியளவில் வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்ற இளம் பெண்ணை இடைமறித்து, இரண்டு பொலிஸார் வாகன ஆவணங்களைச் சோதிப்பது நயத்தக்க நாகரிகமுடைய செயலா? என்பதுதான் நம் கேள்வி.

ஆம், இரவு வேளையில் மோட்டார் சைக்கிளில் தனித்தோ அன்றி இருவராகவோ பெண்கள் செல்லும்போது போக்குவரத்துப் பொலிஸார் அவர்களை இடைமறித்து வாகன அனுமதிப்பத்திரங்களைச் சோதிப்பதென்பது எந்தவகையில் ஏற்புடையதென்பதை பொலிஸ் பொறுப்பதிகாரிகளும் நீதித்துறை சார்ந்தவர்களுமே தீர்மானிக்க வேண்டும்.

இதை நாம் கூறும்போது மோட்டார் சைக்கிளில் இரவு வேளை செல்லுகின்ற பெண்களை இடைமறித்து வாகன அனுமதிப்பத்திரங்களைச் சோதிக்கக்கூடாதா? என்று யாரேனும் கேட்கலாம்.

அவ்வாறு கேட்டால் நிச்சயம் சோதிக்க முடியும். ஆனால் அது இரவுப் பொழுதாயின் அவ்விடத்தில் பெண் பொலிஸாரின் பிரசன்னத்துடன் சோதனையை நடத்துவதுதான் பொருத்தம்.

எனவே சட்டத்தை அமுலாக்குவதாக இருந்தாலும் அங்கும் பண்பாடு பேணிப் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதுதான் நம் தாழ்மையான கருத்து.

எனவே இத்தகைய நாகரிகமற்ற செயல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

# தேர்தலைப் பிற்போட அரசு முயற்சித்தால் அதனைத் தடுக்கு அனைத்தும் தயார்

## ஜே.வி.பி தலைவர் அநுரகுமார

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமானால், அதனைத் தடுப்பதற்கு தமது கட்சி அனைத்து நடவடிக்கைகளையும், எடுக்கும் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கருத்து வெளியிட்ட அவர், தற்போது கருவறையில் உள்ள குழந்தை கூட, இந்த ஆட்சியாளர்களின் செயலுக்கு, இழப்பீடு செலுத்த வேண்டிய நிலையில் உள்ளதாக தெரிவித்துள்ளார்.

நிலத்தை முத்தமிடும் போதும், மார்பில் தட்டிக் கொள்ளும்போதும், நாட்டின் மீது அன்பு செலுத்துவதாக சிலர் நினைத்தனர்.

ஆனால், நாட்டின் மீது அன்பு செலுத்துவதாயின், நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதையே. உண்மையாக செய்ய வேண்டும் என அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (ம-7)

## யாழில் காணி மோசடி வழக்கு

# கைதான சட்டத்தரணியின் விளக்க மறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் காணி மோசடி வழக்கில் கைதான சட்டத்தரணியின் விளக்க மறியலை நீடித்து யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது. காணி மோசடி வழக்கில் கோண்டாவிலை சேர்ந்த சட்டத்தரணி கைதாகி விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஏற்கெனவே ஒரு காணி மோசடி வழக்கில் கைதானவர், பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில், மற்றொரு காணி மோசடி வழக்கில் சிக்கி, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட போது, அவரை மேலும் 7 நாட்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. (ம-7)

# திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பழங்கிணற்றடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாளை 8 ஆம் திகதி காலை 7 மணிக்கு திருவாசக முற்றோதல் இடம் பெறும்.

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா தலைமையில் இடம்பெறும் இத் திருவாசக முற்றோதல் 25 ஆவது ஆண்டாகத் தொடர்ந்து இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. (ம)

# புத்தூர் பொதுநூலகத்தின் வாசிப்பு மாத ஊர்திபவனி

(யாழ்ப்பாணம்.

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை புத்தூர் பொது நூலகத்தினால் நேற்று தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு புத்தகங்கள் தாங்கிய ஊர்தி பவனியானது வாதரவத்தைக் கிராமத்தை நோக்கிச் சென்றது.

புத்தூர் பொதுநூலகத்தில் இருந்து ஆரம்பமாகிய இந்நிகழ்விற்கு புத்தூர் பொதுநூலக நூலகர் திருமதி. உ.காஞ்சனமாலா தலைமையில் இடம்பெற்றது.

காலை 9 மணிக்கு ஆரம்பமாகிய ஊர்தியானது யா/வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயத்தைச் சென்றடைந்து அங்குள்ள மண்டபத்தில் மாணவர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெற்றது.

தொடர்ந்து நூலக வசதி எதுவுமற்ற இக்கிராமத்திற்கு சனசமூக நிலையத்தினூடாக இக்கிராம மக்களின் வாசிப்பு தேவையைப் பூர்த்தி செய்யும் முகமாக சுழற்சி முறையில் பொதுநூலகம் புத்தூருடன் இணைந்து செயற்படுவதற்கான 350 நூல்களும் அலுமாரியும் நேற்றைய தினம் செயலாளர் இ.பகீரதனால் வழங்கி வைக்கப்பட்டது. (4)

# முப்பெரும் தமிழ் விழா

யாழ்ப்பாணம் பெட்டகம் நிழலுருக் கலைக் கூடத்தால் எதிர்வரும் மே மாதம் 21 ஆம் திகதி ஐ.நாவின் பிரகடனமான உலக பண்பாட்டுத்தினத்தினை முன்னிட்டு 'பண்பாட்டு மரபு பேணி மீண்டெழுவோம் வாரீர்' என்னும் தொனிப்பொருளில் சர்வதேச ரீதியில் கலைத்திறன் போட்டிகளை நடத்தி முப்பெருந் தமிழ் விழாவொன்றினை நடத்துவதற்குத்திட்டமிட்டுள்ளது.

இவ்விழாவினை முன்னிட்டு 12 கலைத்திறன் போட்டிகளை நடத்தி அதில் முதலாவது இடத்தினைப் பெறும் போட்டியாளருக்கு 'யாழ்தாரகை' என்ற விருதினை வழங்கி கௌரவிப்பதற்கும் மூத்த கலைஞர்களைக் கௌரவிப்பதற்கும் திட்டமிட்டுள்ளது என யாழ்ப்பாண பெட்டகம் நிழலுருக் கலைக்கூடக இயக்குநர் மா.அருள்சந்திரன் அறிவித்துள்ளார். (4-6)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை **யாழ். பிரதேசத்தில்** பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம்-மின்சார சபை, ஆளுநர் விடுதி, யாழ். மாவட்ட செயலகம், துளசி மஹால், யு.எஸ் விடுதி, மருத்துவ மனை வீதி, கச்சேரி நல்லூர் வீதி சந்தி, மூலவைவிளான், அரசடி சந்தி, சங்கானை சங்கானை வைத்தியசால்ல, சங்கானை சந்தை, றிச்சாமம், தொட்டிலடி, வல்வை வீதி-சங்கானை ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** 682 படைப்பிரிவு இராணுவப் படை முகாம்-புதுக்குடியிருப்பு, ஹைட்றா மணி, இரணைப் பாலை, கைவேலி (மருத்துவ மனை), கோம்பாவில், புதுக்குடியிருப்பு மருத்துவமனை, புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையம், புதுக்குடியிருப்பு பிரதேச சபை, வானவில். திம்பிலி ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** அந்தோனிப் பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, ஆவே மரியா ஐஸ் தொழிற்சாலை, கூல் மென் ஐஸ் தொழிற்சாலை, எருக்கலம்பிட்டி நீர் வழங்கல் திட்டம், கீரி ஐஸ் தொழிற்சாலை, தொழிற்பேட்டை, கச்சேரி வளாகம், மன்னார் வைத்தியசாலை, மன்னார் நீர் வழங்கல் சபை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், NA QDA-ஊரை வாரனர wai கடற்படை முகாம் - ஒலைத்தொடு வாய் புதிய சில்க்ரோடு அகுடிக்கம் பெனி பிரைவேட் (லிமிடெட்) (கடல்உணவு களஞ்சியம்), பெரியகரைசல் பல்மெய்ரா ஹவுஸ், பல்மெய்ரா ஹவுஸ் தலை மன்னார், தப்ரோபேன் உறைந்த உணவு (இறால் பண்ணை). மன்னார் தொலைத் தொடர்பு நிலையம், தலை மன்னார் வைத்தியசாலை, தலை மன்னார் கடற்படை முகாம், ரைமக்ஸ் ஆடை வங்காலைப்பாடு சென்ட் லார்ட்ஸ் ஐஸ் தொழிற்சாலை நீர் வ்ழங்கல் தோட்டக்காடு. இளைஞர் படை பயிற்சிமையம், கார்கில்ஸ் பூட்சிட்டி - மன்னார், இலங்கை போக்குவரத்து சபை மன்னார். டயலொக் - தள்ளாடி. நடுக்குடா, பேசாலை - ஐஸ் தொழிற்சாலை, தள்ளாடி மன்னார் நகரம், எழுத்தூர், எழில் நகர், எருக்கலம் பிட்டி, யின் றோன் நகர், ஜோசப் வாஸ் நகர், கட லேரி விதி, கட்டு காரங் குடியிருப்பு, கரைசல் திட்டம், கீழியங் குடியிருப்பு கொன்னையன் குடியிருப்பு, குருசுபாடு கடற்படை முகாம், மாலுவாடி சந்தி, மூர் வீதி, முள்ளிப்பள்ளம், ரைமக்ஸ் ஆடையகம் அருகில், இளையோர் சேவை மையத்தடி, ஒலைத் தொடுவாய். ஒல்லிமோட்டை படப்பாடி நீர் வழங்கல், பள்ளி முனை, பரப்பாங் கண்டல் பருத்திபண்ணை, பாவிலுப்பட்டான் குடியிருப்பு, பெரியகர்ரைசல். பேசாலை, புதுக்குடியிருப்பு திட்டம், புதுக்குடியிருப்பு, புகையிரத நிலையம் சாந்திபுரம், சிலாவத்தை, சிறுநாவற்குளம், சிறுதோப்பு, சவுத்பார் இராணுவ முகாம், மன்னார் ஸ்ரீலங்கா டெலி காம், புனித செபஸ்டியன் தேவாலயம், சணி கிராமம், தல்லைமன்னார். தலைமன்னார் கப்பல் வீடமைப்பு திட்டம், தலைமன்னார் புகையிரத நிலையம், தாழ்வுப்பாடு, தாராபுரம் தாராபுரம் திட்டம், தரவன் கொட்டு, தோட்ட வெளி, துள்ளுகுடியிருப்பு தும்பு தொழிற் சாலை, துள்ளுகுடியிருப்பு திட்டம், யு.சி மைதானம், மன்னார், வங்காலைப்பாடு பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருளையும் பெற்றுத்தாருங்கள்

# நெல்லினையும் விற்பனை செய்யுங்கள்

## கிளிநொச்சி மாவட்ட செயலாளரிடம் விவசாயிகள் கோரிக்கை

(அக்கராயன்)

**கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழான அறுவடைக்கான எரிபொருளைப் பெற்றுத் தருவதுடன் அறுவடை செய்யப்படுகின்ற நெல்லினை விற்பனை செய்வதற்கான நடவடிக்கையினையும் எடுக்கும்படி இரணைமடுக் கமக்கார அமைப்புகளின் சம்மேளனம் கிளிநொச்சி மாவட்டச் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இது தொடர்பான மனு ஒன்று கடந்த 4 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டச் செய லாளரிடம் கையளிக்கப்பட்டது.

எதிர்வரும் 15 நாட்களில் காலபோக நெற்செய்கை அறுவடை தொடங்கப்பட உள்ள நிலையில் இதற்கான எரிபொருளினை பெற்றுத் தரும்படியும் அறுவடை செய்யப்படுகின்ற நெல்லினை நியாயமான விலையில் விவசாயிகள் விற்பனை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கும்படி மாவட்டச் செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் அறுவடைக்கான எரிபொருளினை விவசாயிகள் பெற்றுக்கொள்வதில் நெருக்கடியினை எதிர்கொண்டனர். நெருக்கடிக்கு மத்தியில் அறுவடை செய்யப்படுகின்ற நெல்லிற்கு நியாய விலை கிடைப்பதிலும் நெருக்கடி காணப்பட்டது.

இந்நிலையில் விவசாயிகளினால் மாவட்டச் செயலாளரிடம் மனுக் கையளிக்கப்பட்டுள்ளது. (4-6-350)




வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் "ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு மீளப்பெற முடியாத சமஷ்டியை வலியுறுத்துவதற்கு" அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளையும் ஓரணியில் திரண்டு செயற்படக்கோரி வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களை ஒன்றிணைத்து கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாக முன்னெடுக்கப்பட்டது.
(படங்கள்: ஜோசப்நயன், சப்த சங்கரி, சிவசாந்தன், கஜிந்தன், சுபேசன், சதீஸ்)

# கடலட்டைகள் பிடித்த 9 பேர் மன்னாரில் கைது



(மன்னார்)

மன்னாரில் சட்டவிரோதமான முறையில் கடலட்டைகளைப் பிடித்த 9 பேரை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை அதிகாலை மன்னார் அச்சங் குளத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக கடற்படை தெரிவித்துள்ளது.

இதன்போது டைவிங் கியர், 1 டிங்கி படகு மற்றும் சட்ட விரோதமாக பிடிக்கப்பட்ட 168 கடலட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர்கள் மன்னார் வங்காலைப் பகுதியைச் சேர்ந்த 25 வயதுக்கும் 58 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் மற்றும் அவர்களின் உடைமைகள் சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் கடற்றொழில் திணைக்கள் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது. (4-6-285)



வரலாற்றுச் சிறப்பு மிக்க யாழ். நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மார்கழி திருவாதிரை உற்சவம் நேற்று காலை இடம்பெற்றது. (படம்: சிவசாந்தன்)

## உலக உணவுத்திட்டத்தின்கீழ்

# மன்னார் மாவட்டத்தில் உலர் உணவு விநியோகம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட போசாக்கு குறைவான மற்றும் வறிய குடும்பங்களுக்கு உலக உணவுத் திட்டம் மற்றும் வேல்ட் விஷன் இணைந்து முன்னெடுக்கும் உலர் உணவுப் பொருட்கள் வழங்கும் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 11 ஆயிரத்து 121 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில், முதல் கட்டமாக மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஆண்டாங்குளம்கிராம உத்தியோகத்தர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 68 பயனாளிகளுக்கு குறித்த உலர்உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. பயனாளி ஒருவருக்கு 50 கிலோ அரிசி, 5 லீற்றர் தேங்காய் எண்ணெய், 20 கிலோ பருப்பு ஆகியவை வழங்கிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-285)


ஆண்டு பதினேழில் நினைவு கூருகின்றோம்



எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு
அமரர்
கணபதிப்பிள்ளை கணேசன்
திதி : அபரபக்க பிரதமை
[07.01.2023]
என்றும் உங்கள் புனித ஆத்மா எங்களை ஆசீர்வதிக்க பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 17.07.1927
மறைவு 16.12.2005

துன்னாலை மத்தி, கரவெட்டி.
குடும்பத்தினர்


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 700 | 550 | 600 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 170 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 350 | 350 |
| தக்காளி | 160 | 150 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 | 240 |
| கோவா | 120 | 140 | 160 | 150 |
| கரட் | 200 | 250 | 300 | 320 |
| பூசணி | 200 | 150 | 150 | 200 |
| புடோல் | 300 | 280 | 200 | 300 |
| வாழைக்காய் | 150 | 150 | 150 | 200 |
| சின்ன வெங்காயம் | 650 | 700 | 700 | 1000 |
| பெரிய வெங்காயம் | 240 | 210 | 180 | 240 |
| பாகற்காய் | 650 | 600 | 400 | 700 |
| வெண்டக்காய் | 200 | 250 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 100 | 150 |
| பயற்றங்காய் | 600 | 450 | 600 | 550 |
| லீக்ஸ் | 450 | 300 | 350 | 400 |
| பீற்றூட் | 400 | 400 | 500 | 500 |
| கறிமிளகாய் | 800 | 800 | 800 | 800 |
| முருங்கைக்காய் | -- | 1300 | -- | 2000 |
| போஞ்சி | 650 | 500 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 600 | 400 | 600 | 450 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 100 | 140 |
| தேசிக்காய் | 150 | 150 | 100 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 95 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 300 | 400 | 300 | 350 |
| வெங்காயப்பூ | 700 | 700 | -- | 800 |
| முள்ளங்கி | 200 | 150 | -- | 240 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 | 80 |
| வல்லாரை | 50 | 40 | 80 | 50 |
| ஈரப்பலா | 160 | 140 | -- | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்பஸ்தர்...

பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இரண்டு பிள்ளைகளையுடைய 49 வயதான குடும்பஸ்தரே இவ்வாறு தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் அவர் வீட்டில் உள்ள மரத்தில் தொங்கிய நிலையில் காணப்பட்ட வேளை அயலவர்களால் மருதங்கேணி பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

மருதங்கேணி பொலிஸார் சடலத்தை பார்வையிட்டதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33,104)

## புத்தகப் பைகள்...

பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு பாடசாலை மாணவர்களினதும் புத்தகப் பைகளை சோதனையிட வேண்டாம் என பொலிஸ்மா அதிபர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

பாடசாலைகளில் போதைப்பொருள் தொடர்பான சோதனைகளை நிர்வாகம், பெற்றோர், பழைய மாணவர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## 55 போதை வியா...

மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையின்போது போதைப்பொருள் மற்றும் போதை மாத்திரைகளை விற்பனை செய்த குற்றச்சாட்டில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## மாணவன் மீது...

தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை இரவு 8.30 மணியளவில் யாழ்.கே.கே.எஸ் வீதி தவடிப்பகுதியில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் தெரிய வருகையில்,

தாக்குதலுக்கு இலக்கான மாணவன் பிரத்தியேக வகுப்பிற்கு சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளை குறித்த மாணவனை பின் தொடர்ந்து வந்த வன்முறைக் கும்பல் வழிமறித்து தாக்குதல் நடத்தியுள்ளது.

குறித்த தாக்குதல் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## மயங்கிவிழுந்த...

சாலையில் கோமா நிலையில் சிகிச்சை பெற்றுவந்த பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் கைதடி கிழக்கைச் சேர்ந்த செல்வன் சறோசா (வயது-58) என்பவராவார்.

கடந்த மாதம் 21ஆம் திகதி அன்று சமுர்த்தி வங்கிக்கு சென்றுவிட்டு நாவற்குளம் குன்றடி வழியாக அவர் சென்று கொண்டிருந்தபோது மகள் முறையானவர் மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்றுள்ளார்.

மோட்டார் சைக்கிளால் மயங்கி வீழ்ந்து கோமா நிலையில்யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் வியாழக்கிழமை உயிரிழந்தார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## வடக்கு, கிழக்கு...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் அந்தக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார். (ம-7)

## தாக்குதலுக்கு...

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை அல்வின் ஜெனிராஜ் (வயது-52) என்பவராவார்.

கடந்த 9ஆம் மாதம் 30ஆம் திகதி பண்ணை கடற்பகுதிக்கு இறால் பிடிக்கச் சென்ற இவரை ஜெலி மீன் தாக்கியதாக தெரிவிக்கப்பட்டது. இதில் காயமுற்றவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார்.

பின்னர் இயலாமை காரணமாக தொழிலுக்கு செல்லாது வீட்டில் இருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை உடல் நிலையில் கடுமை ஏற்பட்டதால் காலை 7 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

சிகிச்சை பலனின்றி நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை உயிரிழந்தார். இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். இதன்போது பல தடவைகள் அவரை ஜெலி மீன் தாக்கியதாகவும் இம்முறை தாக்கியதிலேயே அவர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. (ம-7,60)

## ஏனைய கட்சி...

நேற்று ஜனாதிபதி செயலகத்தில் பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் இலத்திரனியல் ஊடக செய்திப் பணிப்பாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுடன் தாம் மீண்டும் கலந்துரையாடலை மேற்கொண்டதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, அதிகாரப் பகிர்வு தொடர் பில் ஏனைய அரசியல் கட்சி களின் கருத்துக் களைப் பெற்றுக் கொள்வது தொடர்பான கலந்துரையாடலை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவித்தார்.

அதிகாரப் பகிர்வுக்கு ஏனைய அரசியல் கட்சிகளின் கருத்துக்களும் முக்கியம் என ஜனாதிபதி குறிப்பிட்டார். (ம-7)

## யாழ்...

திட்டம் 2வது முறையாகவும் நிறைவேற்றப்பட முடியாத சூழல் ஏற்பட்டபோது, முதல்வர் வி. மணிவண்ணன் பதவியை துறந்தார்.

இதையடுத்து, குழப்பமான சூழல் ஏற்பட்டது.

உள்ளூராட்சி விதிகளின் அடிப்படையில். மீண்டும் முதல்வர் தெரிவு இடம் பெறாது என வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதன் அறிவித்தார். யாழ்.மாநகர சபையின் எதிர்காலம் குறித்து சட்டமா அதிபரிடம் வினவவுள்ளதாக தெரிவித்தார்.

எனினும், மீண்டும் முதல்வர் தெரிவு நடத்தப்படலாமென்றும் சிலர் கருத்து தெரிவித்து வந்தனர்.

இந்த நிலையில், மீண்டும் முதல்வர் தெரிவு நடைபெறவுள்ளதாக வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளார். அது குறித்த வர்த்தமானி அறிவித்தலும் நேற்று வெளியாகியுள்ளது. (ம-7)

## வேறு எவரும்...

விடுத்த அழைப்பிற்கு ஏற்ப இந்த கலந்துரையாடல் இடம்பெற்றதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் கூறினார்.

இந்த கலந்துரையாடலில் சட்டமா அதிபரும் பங்குபற்றியிருந்தார்.

அரசியலமைப்பு அல்லது நீதிமன்ற நடவடிக்கை தவிர்ந்த வேறு நடவடிக்கைகள் ஊடாக உள்ளூராட்சி மன்ற தேர்தலை தடுப்பதற்கு சாத்தியமில்லை என ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளனர்.

தேர்தலை நடத்துவதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் இதன்போது ஜனாதிபதியை தெளிவுபடுத்தியதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது. (ம-7)

## முல்லை இளை...

தினருக்கு அறிவித்ததாக தெரிவிக்கப்படுகிறது. முல்லைத்தீவை சேர்ந்த இரத்ன ராசா சஜந்தன் (வயது-33) என்ற இளைஞனே உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 06/01/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1447
ரிஷபம் 9 5 4 9 8 3

தன நிதானய
திகதி - 2023.01.06
சீட்டிழுப்பு இலக்கம் - 1022
L 13 51 64 68

கொவிசெத
திகதி 2023.01.06
சீட்டிழுப்பு இலக்கம் 3234
X 08 48 56 70

மெகா பவர்
திகதி 06/01/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1340
Y 08 28 54 56 60

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.01.06
சீட்டிழுப்பு இலக்கம் 301
சிம்மம் 16 26 32 43 சிம்மம்

மஹஜன சம்பத
திகதி 2023/01/06
சீட்டிழுப்பு இலக்கம் 4992
0 0 9 5 1 6 6

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1967 நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.01.06 தினம் வெள்ளிக்கிழமை
H 04 33 36 44
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,264,360/-

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.01.06
சீட்டிழுப்பு இல : 4128
வர்ணம் : செம்மஞ்சள்
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,627,760/-
09 22 27 41 C

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 271
சீட்டிழுப்பு திகதி 2023.01.06
வெள்ளிக்கிழமை
17 39 47
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,872,380/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,592,114/-
திகதி 2023-01-06
வெற்றி வாரம் 3679
வர்ணம் நீலம்
39 49 54 55
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 6,328,680/-

வாழ்க்கை
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
L 04 23 43 50 58
சீட்டிழுப்பு வாரம் 1143
திகதி 2023.01.06 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 294,773,066.20
Web : www.dlb.lk

அதிர்ஷ்ட கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1793
சீட்டிழுப்பு திகதி : 2023.01.06
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,965,500/-
04 10 54 56 S

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரியாலையில் கைக்குண்டு ஒன்று மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் கைக்குண்டு ஒன்றுநேற்றைய தினம் வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டுள்ளது. அரியாலை குசவம்பலம் வீதியில் கைக்குண்டு ஒன்று காணப்படுவதாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், பொலிஸார் நீதிமன்ற உத்தரவைப் பெற்று பொலிஸ் விசேட அதிரடிபடையினரின் குண்டு செயல் இழக்க செய்யும் படையணியின் உதவியுடன் செம்மணிப் பகுதியில் கைக்குண்டை செயலிழக்கச் செய்துள்ளனர். (ம-7,33)

## விற்பனைக்கு

- பொங்கல் அகப்பைகள்
- திருவுபலகைகள்
- விளக்குமாறு
- இருபலகை



தைப்பொங்கலை முன்னிட்டு வியாபாரிகளுக்கு விசேட விலைக் கழிவில் சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு

யாழ்ப்பாணம் 077 210 5286

கிளிநொச்சி 077 559 1778

(14170)

## தேவை

பிரபல கல்வி நிறுவனம் ஒன்றிற்கு வகுப்புக்கள் நடாத்துவதற்கு K.K.S. Road ற்கு அண்மையில் இடம் தேவை. மாதாந்த கொடுப்பனவு அல்லது வாடகை உடன் படிக்கை பொருத்தமானது.

தொடர்புகளுக்கு :

ச.செல்வன் (JP)

077 230 6642, 071 520 6642

(14163)

## வேலை ஆட்கள் தேவை

தச்சு வேலையில் அனுபவம் உள்ளவர்கள் தேவை (கட்டில், கதிரை, மேசை செய்யக்கூடிய வர்கள்)

கோண்டாவில்.

தொடர்புகளுக்கு :

077 713 0872

(14169)

## பணிப்பெண் தேவை

வல்வெட்டித்துறையில் வீட்டுவேலைக்குபணிப் பெண் தேவை

தொடர்புகளுக்கு :

077 199 6912

(C-5749)

## ஆட்டோ வாடகை / விற்பனை

நாள் வாடகைக்கு அல்லது விற்பனைக்கு. ஆட்டோக்கள் உள்ளது.

தொடர்புகளுக்கு :

ச.செல்வன்

077 230 6642

071 520 6642

(14163)

## அன்பொளி கல்வியகம்

2023

கல்வியாண்டுக்குரிய

தரம் 1, 2, 3, 4, 5 வகுப்புக்கள்

07.01.2023 சனிக்கிழமை

ஆரம்பமாகின்றன.

அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்

(14165)

## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்

விரைவுப் பொதிகள் சேவை

விசா சேவைகள்

V2 TRAVELS

(C-5750)

எமது கிளைகள்

- கிளிநொச்சி • சுன்னாகம் • கோப்பாய்
- சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி
- கொடிகாமம் • புத்தூர் • பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை • பண்டத்தரிப்பு
- சங்கானை • புதுக்குடியிருப்பு • திருகோணமலை

- பயிற்சிக்கால ஊக்கத்தொகை - 20,000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் - 25,000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER



- ✓ சம்பளம் - 25000 /= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- ✓ வயது-22 தொடக்கம் 35
- ✓ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

V2 TRAVELS

(C-5750)

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777

## வவுனியாவில் வீதி விபத்து

### பெண் படுகாயம்


(வவுனியா)

மன்னார் வீதி வவுனியா வேப்பங்குளம் பகுதியில் வவுனியா நகரசபை பவுசர் மோதி பெண் ஒருவர் காயம் அடைந்த நிலையில் வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார். நேற்றுக் காலை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீதியைக் கடக்க முற்படும் போதே விபத்து ஏற்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

## காணி வீடு விற்பனைக்கு

நாவலர் வீதிக்கும் கண்டி வீதிக்கும் அருகில் உள்ள நிலப்பரப்பு 1 1/2 கொண்ட வீட்டுடன் கூடிய காணி உடன் விற்பனைக்குண்டு.



தொடர்புகளுக்கு : 077 229 4985

(14133)

## மரண அறிவித்தல்

### திருமதி மல்லிகாதேவி நவரத்தினம்



அச்சுவேலி வடக்கு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மல்லிகாதேவி நவரத்தினம் அவர்கள் 04.01.2023 புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - தங்கம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னையா - பரணிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு மருமகளும் நவரத்தினம் அவர்களின் பாசமிகு மனைவியும், சசிதரன் (பிரான்ஸ்), கஜேந்தினி (சுவிஸ்), சுஜேந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு தாயாரும், மனோஜா (பிரான்ஸ்), ஈஸ்வரன் (சுவிஸ்), டிஷானி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.01.2023 நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி வடக்கு வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.


(14171)

தகவல் : குடும்பத்தினர்
077 440 3377

## மரண அறிவித்தல்

### திருமதி முத்தையா ஸ்டெலா நவமணி

தோற்றம் 19 08 1927



மறைவு 04 01 2023

கரம்பனைப் பிறப்பிடமாகவும் இல.67/1, கோவில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்தையா ஸ்டெலா நவமணி கடந்த (04.01.2023) புதன்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான மெனுவல்பிள்ளை சின்னத்துரை - ரொசலின் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ் சென்ற ரேமன்ட் முத்தையாவின் அன்பு மனைவியும், குமார் முத்தையா (UK), காந்தி மனுவேல்பிள்ளை (அவுஸ்திரேலியா), Dr.கமல் முத்தையா (UK), குமுதினி மரியநாயகம் (நோர்வே), Dr.கிறிஸ்ணி ஸ்ரீபதி (UK) ஆகியோரின் பாசமிகு தாயாரும், வர்சலா முத்தையா, மகேந்திரன் மனுவேல்பிள்ளை, தர்சினி முத்தையா, மார்கஸ் மரியநாயகம், Dr.அழகக்கோன் ஸ்ரீபதி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைகள் இன்று (07.01.2023) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பின்பு யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள புனித பரியோவான் ஆலயத்தில் முற்பகல் 9.30 மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.67/1, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

(14159)

தகவல் : குடும்பத்தினர்

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரி பகுதியில் 10 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A9 பிரதான வீதியில் இருந்து 700 m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 62 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன.(பைப் லைனிங்)
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

பார்வையிடும் நேரம்

காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு - ஜெயம்

077 986 5457, 077 026 7619

(14173)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.01.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org